**தலைப்பு 319 – சப்ரகமுவ மாகாண சபை**

---

**1. தூரநோக்கு, பணிக்கூற்று மற்றும் செயற்பணிகள்**

**1.1 தூரநோக்கு**

நிகரற்ற சப்ரகமுவவிற்கு

**1.2 செயற்பணி**

சப்ரகமுவ மக்களின் அபிவிருத்திக்காக சகல வளங்களையும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமானதாகவும் முகாமைத்துவம் செய்வதன் மூலம் சப்ரகமுவவின் வெற்றிப் பயணத்திற்கு.

**1.3 செயற்பணி**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் பதின்மூன்றாவது திருத்தம் மற்றும் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் என்பவற்றின் பிரகாரம் கடமைகளையும் செயற்பாடுகளையும் நிறைவேற்றுதல்.

**2. வருடாந்த நிதிக்கூற்றுக்கள்**

**மொத்த நிதியேற்பாடும் செலவினமும்**

சப்ரகமுவ மாகாண சபைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதியேற்பாடு ரூபா 28,123.5 மில்லியன் தொகையானதுடன் அதில் மீளாய்வாண்டின் இறுதிவரை மொத்த நிதியேற்பாடும் பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **செலவினம்** | **2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது** | |
|---|---|---|
| | **தேறிய நிதியேற்பாடு** | **பயன்பாடு** |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| மீண்டெழுபவை | 26,688 | 26,688 |
| மூலதனம் | 1,435.5 | 1,435.5 |
| **மொத்தம்** | 28,123.5 | 28,123.5 |

**3. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

-------------------------------------------------

தலைப்பின் கீழ் பாராளுமன்றத்தால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடுகள் மாகாண சபையினால் மாகாண சபை நிதியத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தது. மாகாண சபை நிதியம் கணக்காய்வு செய்யப்பட்டு அது தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படும்.